**தலைப்பு 273 - புத்தளம் மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேந்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

**(அ) கைவிடுதல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 267/2018 ஆம் இலக்க மற்றும் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்கள் முறையாக இனங்காணப்பட்டு கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளில் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், வென்னப்புவ பிரதேச செயலகத்தினால் 12 சொத்துக் களுக்கான பெறுமதி காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் வேறாகக் காட்டப்படுவதற்கான நடவடிக்கை | குறிப்பிட்ட சேவா பியசகளின் காணியின் அளவு தொடர்பாக சரியான இனங்கண்டு கொள்வதற்கு கீழ்வரும் சேவை பியச அலுவலகங்களை அளவீடு செய்யுமாறு புத்தளம் அளவை அத்தியட்சகருக்கு அளவீட்டுக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இந்த அளவீட்டு நடவடிக்கைகள் முடிவுற்றும் அளவீட்டு வரைபடங்கள் இற்றைவரையில் வழங்கப்படவில்லை. குறிப்பிட்ட திட்டங்கள் | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 267/2018 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்கள் முறையான இனங்காணப்பட்டு கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கில் எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டிராததுடன் சிலாபம் பிரதேசச் செயலாளர் தொகுதியின் கீழ் 06 பிரிவுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சேவை பியச மற்றும் அவை அமைக்கப்பட்டுள்ள காணி அவ்வாறு கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைத்தவுடன் விலை மதிப்புத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு சரியான மதிப்பீட்டுப் பெறுமதி பெறப்பட்டு, சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

**(ஆ) இணக்கமின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பெறுமதி ரூபா 2,618,040,805 என்பதுடன், திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் மற்றும் ஏசீஏ 6 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பெறுமதி ரூபா 2,552,542,130 என்பதால் ரூபா 65,498,675 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | நிதி நிலைமைகள் தொடர்பான கூற்றில் ஏசீஏ 6 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டநிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கூற்றின் பெறுமதி ரூபா 2,618,040,805 ஆகக் காட்டப்பட்டுள்ளது. | திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ள ஆதனம், பொறி உபகரணப் பெறுமதி, நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பெறுமதியாகக் கணக்கிடப்படல் வேண்டும். |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான நிதிப் பாய்ச்சலின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் கணக்கிடப்பட்ட பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணம், கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீட்டு கைப்பற்றல்களின் பெறுமதி ரூபா 46,956,248 ஆக இருந்த போதிலும் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் கைப்பற்றலாக ரூபா 39,862,708 குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ரூபா 7,093,540 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல் கூற்றில் கணக்கிடப்பட்டிருந்த பணத்தின் கீழ் நிதிச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல், நிதிச் சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் திறன் விருத்தி என்பன உள்ளடங்கும். ஆனால் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 39,862,708 இன் கீழ் நிதிச் சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற சொத்துக்கள் மட்டுமே உள்ளடக்கப்படுகின்றது. | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறை யல்லா சொத்துக்களைக் கைப்பற்றல் பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடு களினால் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் கணக்கிடப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே ஒப்பீடு செய்யப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கை | நாடளாவிய ரீதியில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர் 5 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியிருப்பின் வேறு நிலையங்களுக்கு சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்காக உடனபடியாக இடம்மாற்றல் செய்யப்பட வேண்டிய போதிலும், மஹவெவ பிரதேசச் செயலகத்தின் 29 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்காய்வின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து முகாமைத்துவ சேவை அலுவலகர்கள், எனது இடமாற்றக் கட்டளை மூலம் பிரதேசச் செயலகங்களுக்கு இடையில் இடமாற்றல் செய்யப்பட்டிருந்ததுடன் கிராம சேவகர் பிரிவு மட்டத்திலான மாற்றல்கள் பிரதேசச் செயலகத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நாடளாவிய ரீதியில் சேவையாற்றும் உத்தியோகத்தர் களின் இடமாற்றல் தொடர்பாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 சனவரி 03 ஆந் திகதிய 01/2017 (I) ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை | மாவட்டச் செயலகம் மற்றும் 16 பிரதேசச் செயலகங்களுக்கான கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் 2020 சனவரி 20 ஆந் திகதிக்கு முன்னர் கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அத்தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. | கொவிட் 19 நிலைமையால் தகவல்கள் சமர்ப்பித்தலானது தாமதமாகியது. பூரணப்படுத்தப்படாத தரவுகள் சரியாகப் பூரணப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 திசெம்பர் 01 ஆந் திகதிய நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்திச் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இன் 08 ஆம் பந்தி | ‘‘சுப்பிரிகமக்’’ சமூக அடிப்படைக் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கற்பிட்டி, ஆனமடுவ, நவகத்தகம மற்றும் புத்தளம் பிரதேசச் செயலகங்களினால் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் முறையே 62, 97, 55 மற்றும் 51 தொடர்பாக கிராமப்புறப் வீதிப் படிக்கட்டுக்கள், கல்வெட்டுக்கள், சிறிய பாலங்கள் ஆகிய பகுதிகளுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. சுற்றறிக்கை மூலம் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள 08 பகுதிகளையும் உள்ளடக்கியதாக செயற்திட்டங்களைத் தெரிவு செய்து செயற்படுத்துவதில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. | செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களுக்கான அரசியல் பிரதிநிதித்து அடிப்படையில் கிராமியக் குழுவிற்கான சுற்றறிக்கைப் பிரகாரம் தெரிவிக்கப்பட்டு கிராமிய மட்டத்தில் முன்மொழிவுகள் பெறப்பட்டதுடன் அம்முன்மொழிவு குழுவினால் முன்னுரிமை வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட பிரிவில் சேவையாற்றும் அதிகாரிகளின் கையொப்பத்துடனான முன்மொழிவு ஆவணம் பெறப்பட்டுள்ளது அதன் பிரகாரம் செயற்திட்டம் தொடர்பான சாத்தியக் கூற்று அறிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி அதிகாரிகள் மூலம் பெறப்பட்டு செயற்படுத்தப் பட்டுள்ளது. அதில் கிராம சேவகப் பிரிவின் முன்னுரிமையளிக்கப்பட்ட முன்மொழிவுகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கைப் பிரகாரம் தெரிவு செய்தல் செயற்படுத்தப் படல் வேண்டும். |

## 2.2 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 262/2017 ஆம் இலக்க மற்றும் 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதியம் பெற்றுச் | மரணித்த உத்தியோகத்தர் களின் அறவிட வேண்டிய ரூபா 134,345 ஆன மிகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. மிகுதி நிறுவையை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மரணித்த உத்தியோகத் தரின் கடன் மிகுதி தொடர்பாக அரச கணக்குகள் சுற்றறிக்கை 262/2017 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சென்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களின் அறவிடப்பட வேண்டிய எவ்வித கடன் மிகுதிகளும் முற்பண பீ கணக்கில் காட்டப்படாமல் இருப்பதை நிறுவனத் தலைவர்கள் உறதி செய்ய வேண்டிய போதிலும் புத்தளம் மாவட்டச் செயலகத்திற்குரிய 06 பிரதேசச் செயலகங்களின் 12 மரணித்த உத்தியோகத்தர்களின் மொத்தம் ரூபா 1,503,469 ஆன கடன் மிகுதிகளை அறவிடுவதற்கான போதியளவு வேலைத் திட்டங்கள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) புத்தகளம் பிரதேச செயலகங்கள் 03 இல் வருடங்கள் 1-5 இற்கு இடைப்பட்ட காலத்திலிருந்து இடமாற்றலாகிச் சென்ற 3 உத்தியோகத்தர்களின் அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதியின் மொத்தப் பெறுமதி ரூபா 224,156 ஆகும். | ஒரு உத்தியோகத்தரின் கடன் மிகுதி தீர்க்கப்பட்டுள்ளது. ஏனைய இரு உத்தியோகத்தர்களின் கடன் மிகுதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட நிலுவைக் கடன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 வைப்புக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரு வருடங்களுக்கு மேற்பட்ட 07 வைப்புக் கணக்கு வகைகளுக்கான மொத்தப் பெறுமதி ரூபா 50,679,629 ஆன பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்வரும் வருடத்திற்குள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரு வருடங்களுக்கு மேற்பட்ட பொறுப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அளவினை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 34 இன் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமல் வழங்கப்பட்ட ஒதுக்கத் தொகைக்கு மதிப்பீடுகளைத் தயாரித்து செயற்படுத்தியதன் காரணமாக மாவட்டத்தின் 04 பிரதேச செயலாளர் தொகுதிகளுக்கான ரூபா 25,463,412 செலவிடப்பட்ட 55 செயற்திட்டங்கள் பொதுமக்களுக்கு பலன்களை வழங்காது பல வருடங்களாக விளைவற்றதாகக் காணப்பட்டதுடன், அதற்காக செலவிடப்பட்ட அரச நிதியம் விளைவற்ற செலவொன்றாகக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் பெறப்படுகின்ற ஒதுக்கங்களைப் பயன்படுத்தி செயற்திட்டங்களை முடிவுறுத்துவதற்காக உரிய அரசியல் அதிகார சபைக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப் பிரமாணம் 34 இன் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மஹகும்புக்கடவ பிரதேசச் செயலகப் பிரிவில் 2019 ஆம் ஆண்டிற்கான கம்பெரலிய விரைவுபடுத்தப்பட்ட கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 20 செயற்திட்டங்களுக்கான மொத்தம் ரூபா 876,495 ஆன பிடிகாசு குறைக்கப்பட்டுச் செலுத்தப்பட்டிருந்ததுடன் பராமரிப்புக் காலத்தில் இனங்காணப்பட்ட தவறுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் 13 இற்கான நிறுத்தி வைத்த காலப்பகுதியில் ஏற்பட்ட தவறுகள் திருத்தப்பட்டன. | செயற் திட்டங்களின் நிறுத்தி வைத்த காலத்திற்குள் தவறுகள் திருத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை உயர்தொழில் நுட்ப நிறுவனமொன்று கறுவலகஸ்வேவ பிரதேசச் செயலகப் பிரிவில் நிறுவப்பட்டமைக்கான 2019 ஆம் ஆண்டில் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் 2019 ஒக்டோபர் 15 ஆந் திகதி அணுகல் சாலைக்கு சல்லிக் கற்கள் போடுவதற்காக ரூபா 1,374,333 உம், 2019 நவம்பர் 29 ஆந் திகதி மேலே கூறப்பட்ட இடத்தைச் சுத்திகரிப்பதற்காக ரூபா 251,991 உம், செலவிடப்பட்டிருந்தன. ஆயினும், இத்தொழில் நிர்மாணத்திற்கு குறிப்பிட்ட திட்டங்கள் இல்லாதபடியால் கம்பெரலிய வேலைத் திட்டத்திற்கு மேற்கூறப்பட்ட பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன், மேற்கொண்டு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையால் அப்பகுதி மீண்டும் காடுகளாக்கப்பட்டுள்ளதால் செலவிடப்பட்ட முழுத் தொகையும் விளைவற்ற செலவாகக் காணப்பட்டது. | முன்மொழியப்பட்ட பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிர்மாணப் பகுதிக்கு அணுகுசாலைகள் அமைப்பது மற்றும் நிலத்தை தனியாக இனங்காண்பதின் தேவைப்பாட்டின் அடிப்படையில் அப்போதைய அரசின் திட்டங்களின் அடிப்படையில் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமான பொறுப்பு இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்குரியது என்பதால் அது எனது கடமைகள் எல்லைக்கு அப்பாற்பட்டது என்பதை தயவுடன் சுட்டிக் காட்டுகின்றேன். | இது சம்பந்தமான பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு தெரியப்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | தங்கொட்டுவ நீர் வழங்கல் சபைக்குச் சொந்தமான அழுத்த சமநிலைத் தாங்கி நிறுவப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தமை தங்கொட்டுவப் பிரதேசச் செயலாளர் பிரிவிற்கான ம/கஹடவிலக்கிராம சேவகர் பிரிவில் ஆகும். இதற்காக அக்கிராம சேவகர் பிரிவில் பிரதேசச் சபைக்குச் சொந்தமான தெல்கஹவத்த எனும் பெயரிலான காணியிலிருந்து 0.2023 ஹெக்டயர் ஆன | வென்னப்புவ பிரதேச சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுடன் தங்கொட்டுவ அழுத்த சமநிலையை நிர்மாணிப்பதற்கான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தங்கொட்டுவ தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரித்தான அழுத்த சமநிலைத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக ப/கஹடவிலப் பிரிவில் 2 றூட் | ஒரு பெரிய நிலப்பரப்பில் செயற்படுத்தக் கூடிய செயற் திட்டங்களை விரைவில் செயற்படுத்து வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவொன்று (றூட் 02) கைப்பற்றுவதற்காக இலக்கம் 1716/15 ஆன 2011 யூலை 26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கைப்பற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கைப்பற்றுதல் பூர்வாங்க நடவடிக்கைகள் மற்றும் நட்டஈட்டுக் கொடுப்பனவு நடவடிக்கைகள் ரூபா 773,220 ஆன தொகையொன்று பிரதேசச் செயலகத்தில் வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் வென்னப்புவ பிரதேச சபையின் மூலம் காணியின் உரிமை கைப்பற்றப்படாமையால் தங்கொட்டுவ பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள 28 கிராம சேவகர் பிரிவுகள், நாத்தாண்டியா பிரதேசச் செயலாளர் பிரிவின் 07 கிராம சேவகர் பிரிவுகள், வென்னப்புவ பிரதேசச் செயலாளர் பிரிவில் 52 கிராம சேவகர் பிரிவுகளுக்காக அதிக பரப்பளவு கொண்ட இத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. | ஆன தெல்கஹவத்த காணியின் உரிமையை வழங்குவதற்கு வென்னப்புவ பிரதேச சபை இணக்கம் தெரிவித்துள்ளது. அத்துடன் அமுத்த சமநிலைத் தாங்கியின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக நீர் வழங்கல் சபை தயாராக உள்ளது. அதன் பிரகாரம் தங்கொட்டுவ, நாத்தாண்டியா, மற்றும் வென்னப்புவ பிரதேச செயலகத் தொகுதிகளில் 52 கிராம சேவகர் பிரிவுகளினூடாக நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (உ) | வனாத்துவில்லுப் பிரதேச செயலகப் பிரிவில் நாகமடுவ தெற்கில் அமைந்துள்ள புபுது முன்பள்ளிக் கட்டிடம் 2015 ஆம் ஆண்டில் ரூபா 300,000 ஆன மதிப்பீட்டிலும் மற்றும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 500,000 ஆன மதிப்பீட்டிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 2021 பெப்ரவரி 23 ஆந் திகதி கணக்காய்வுப் பரிசோதனையின் போது | இப்பிரதேசத்தில் சுண்ணாம்புக் கற்கள் காணப்படுவதால் தரையில் விரிசல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. இந்நிலைமையை கட்டுப்படுத்துவது கடினம். | நிர்மாணச் செயற்திட்டங்கள் தொடங்கும் போது காணியின் தன்மை கண்டறியப்பட்டு அதற்குப் பொருந்தும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

மேற்குறிப்பிடப்பட்ட முன்பள்ளி கட்டிடத்தின் தரையில் விரிசல் மற்றும் பள்ளங்கள் ஏற்பட்டிருந்தது.

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹவெவப் பிரதேச செயலகத்தில் ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்கான சிறுவர் சந்ததியை உருவாக்கும் நோக்குடன் மேற்கு இரணவில சிறுவர் பூங்காவை நிர்மாணிக்கும் செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதுடன், அது மேற்கு இரணவில தொடரிலக்கம் PU/MHW/2016/122 ஆன காணிப் பகுதியில் கட்டப்பட்டுள்ளது. இது கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமானதுடன், கணக்காய்வுத் திகதி வரையில் கடல்நீர் செயற்திட்டம் கட்டப்பட்டுள்ள இடத்திற்கே வந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. மேலும் கடலடிப்பு ஏற்பட்டால் செயற் திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட ரூபா 927,000 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாகவும், கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் செயற்திட்டத்திற்காக இடத்தை தெரிவு செய்வதில் தவறொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிரதேசச் செயலகப் பிரிவின் மேற்கு கரையோரப் பகுதி கடல் அரிப்பிற்கு உள்ளானது. கணக்காய்வு ஐயவினாவிற்கு உட்பட்ட சிறுவர் பூங்காவும் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளதால் மேற்கூறப்பட்ட இயற்கை காலநிலைச் சீற்றத்தின் தாக்கங்கள் இச்சிறுவர் பூங்கா அமைந்துள்ள பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. நிர்மாணத்திற்கான நிலத்தை தேர்ந்தெடுக்கும் போது இது போன்ற கடுமையான கடலரிப்பிற்கு ஆளாகாததால் நிலத்தின் சாத்தியக்கூறு அப்போது உகந்த மட்டத்தில் காணப்பட்டதால் குறிப்பிட்ட செயற்திட்டத்தை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதவாறு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் முறையான கவனத்துடன் செலவிடப்பட்ட பணத்தில் உயர்ந்த பலனைப் பெறுவதற்குத் தேவையான முடிவொன்று எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆராச்சிக்கட்டுவ பிரதேசச் செயலகப் பிரிவில் குமாரக்கட்டுவ நீர்ச் செயற்திட்டத்திற்காக 2014 வருடாந்த வரவு செலவு முன்மொழிவுகளின் கீழ் ரூபா 3,884,248 செலவிடப்பட்டிருந்ததுடன், குமாரக்கட்டுவ சமூக சங்கங்களினூடாக ரூபா 2,204,798 செலவிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு வரையில் அப்பிரதேச மக்களுக்கு குடிநீர் வழங்க முடியாத நிலை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் ஒதுக்கங்களைப் பயன்படுத்தி பலன்களை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மிகுதிக் குறைபாடுகள் பூரணப் படுத்தப்பட்டு பலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | புத்தளம் பிரதேசச் செயலக அலுவலகத்தினால் ‘‘சுப்பிரிகமக்’’ கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,980,000 ஆன தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட சுகாதார மத்திய நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு 05 மாதங்கள் கடந்திருந்த போதிலும் மருத்துவ நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை. அக்கட்டிடம் விளைவற்றதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கட்டிடம் மீண்டும் சீரமைக்கப்பட வேண்டிய பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு சுகாதார அமைச்சிற்கு அந்நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக கையளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கட்டிடம் குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டு மக்களுக்கு பலன்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வனாத்துவில்லு பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 1,936,131 செலவிடப்பட்டு 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட காரைதீவு பிரதான பேரூந்து தரிப்பிடம் மற்றும் அதற்கான காணி 2021 ஆம் ஆண்டு வரையில் பாவனைக்குட்படுத்தப்படாது | இப்பேரூந்து தரிப்பிடம் செயற்படுத்தப்படுவதற்கு வனாத்துவில்லுப் பிரதேச சபைக்கு எழுத்து மூலம் கையளிக்கப்பட்டுள்ளது. அதை திறம்படப் பயன்படுத்துமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கம் நிறைவேற்றப் படுவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்தச் சுற்றாடல் கால்நடைகளுக்கான தங்குமிடங்களாகவும் பயன்படுத்தப்பட்டது. | | நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (உ) | வனாத்துவில்லுப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தெற்கு கிளினிக் மத்திய நிலையம் ரூபா 4,646,356 ஆன செலவில் 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு வரையில் பயன்படுத்தப்படாது விளைவற்றதாகக் காணப்பட்டது. | இந்த நிர்மாண பிரதேசச் சுகாதார பணிப்பாளர் அலுவலகத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதால் இக்கிளினிக் மத்திய நிலையத்தை நடாத்திச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கம் நிறைவேற்றப் படுவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | வனாத்துவில்லுப் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் வனா/சங்/விமத்ய.பொது.3 ஆம் இலக்க மற்றும் வனா/சங்/விமத்ய.பொது 18 ஆம் இலக்க கோவைகளின் மூலம் கங்கவாடிய கிராமத்தில் கரப்பந்தாட்ட மைதானமொன்றை அமைத்தல் தொடர்பாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வில் அந்த இடம் பௌதீக பரிசோதனைக்குட்படுத்தப் பட்டபோது அப்பிரதேசத்தில் காணப்பட்ட கரப்பந்தாட்ட மைதானத்திற்கான உபகரணங்கள் அவதானிக்கப்படவில்லை. | கரப்பந்தாட்ட மைதான உபகரணங்கள் கழற்றப்பட்டு அகற்றப்பட்டிருந்தன. அது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் பாதுகாப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (எ) வனாத்துவில்லு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட வீதியொன்றுக்குச் சல்லிக் கற்கள் பதிக்கப்பட்ட காலத்திலிருந்து மழை பெய்தமை மற்றும் அத்துடன் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வீதி குண்டும் குழியுமாக மாறியமையால், தேக்கி வைக்கப்பட்ட பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் அது திருத்தப்படல் வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது. சல்லிக் கற்கள் பதிக்கப்பட்ட வீதி சுருள்களைப் பயன்படுத்தி நசுக்கப்பட்டுள்ள போதிலும், வீதியின் இரு புறங்களிலும் சுமார் 300 மில்லிமீற்றர் வீதி எல்லைகள் போதியளவில் செப்பனிடப்படாமை அவதானிக்கப்பட்டது. இதற்குக் காரணம் சபையிலோ அல்லது சிறிய சமூக அடிப்படையிலான அமைப்புக்களிலோ கிராமப் புறங்களில் இதற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரமொன்று (Rammer / Vager) இல்லாமை ஆகும். | உடன்படுகின்றேன். சல்லிக்கல் இடப்பட்டுள்ள வீதியின் இரு புறமும் உள்ள பகுதிகளை நசுக்குவதற்கு ஒரு க்ரஷரை (RAMMER) பயன்படுத்துவதற்கு எதிர்காலத்தில் வளங்களுடனான பொருத்தமான சங்கங்கள் அல்லது உபகரணங்களை வாடகைக்கு எடுத்து வேலை விடயங்களைச் செயற்படுத்துவதற்கு ஒப்புக் கொள்ளும் சங்கங்களுக்கு வேலை விடயங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வீதிகளில் சல்லிக் கற்களைப் பதித்த பிறகு பொருத்தமான நசுக்கும் கருவியைப் பயன்படுத்தி தண்ணீர் தெளிக்கப்படல் வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்கள் நிர்மாணிப்பதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹகும்புக்கடவ பிரதேச செயலகத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஜனசேத சனசமூக நீர்ச் செயற்திட்டத்தின் நீர்த்தாங்கி, நீரேற்று நிலையம், கிணறு மற்றும் குழாய்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக ரூபா 10,232,645 செலவிடப்பட்டிருந்த துடன், 2021 ஆம் ஆண்டு | காணப்படுகின்ற குறைபாடுகளைப் பூரணப்படுத்துமாறு சனசமூக சங்கங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய உதிரிப்பாகங்கள் தற்போது வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட பூரணப்படுத்தும் காலத்தின் பிரகாரம் செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டு பலன்கள் பொது மக்களுக்கு வழங்கப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையில் மிகுதி குழாய்கள் மற்றும் உதிரிப் பாகங்களின் குறைபாடுகளின் அடிப்படையில் நீர்ச் செயற்திட்டத்தின் பலன்கள் உரிய மக்களுக்கு வழங்கப்படவில்லை. | | |

## 3.4 பணம் விடுவிக்கப்பட்டும் முன்னேற்றமொன்று கிடைக்கப்பெறாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆனமடுவ பிரதேசச் செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டு கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்தல் விசேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,500,000 ஒதுக்கத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட விசைத்தறி நெசவு மத்திய நிலையத்தின் கட்டிடம் அத்திவாரம் வரையில் மட்டுமே நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டு வரையில் அதன் மிகுதி வேலைகள் பூரணப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | மிகுதி வேலைகளுக்கான ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிர்மாணம் ஆனமடுவ வி.சே.ச சங்கத்திற்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மொத்த கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் மிகுதி வருடங்களில் ஒதுக்கங்களை வழங்குவதற்கான இணக்கத்தைப் பெற்று செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) ஆனமடுவ பிரதேசச் செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 வரையான காலப்பகுதியில் ரூபா 7,725,000 ஆன தொகையொன்று செலவிடப்பட்டிருந்த 18 செயற்திட்டங்கள் முடிவடையாது கைவிடப்பட்டிருந்ததுடன், அச்செயற்திட்டங்களை முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாகப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் கவனம் கோரப்பட்டிருக்கவில்லை. | கட்டம் கட்டமாக நிர்மாணித்தல் எதிர்பார்ப்பின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற ஒதுக்கத் தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் நிதி ஒதுக்கப்படாமையால் இச் செயற்திட்டங்கள் பாதியில் முடிக்கப்பட்ட திட்டங்களாக மாறியுள்ளன. | செயற்திட்டம் செயற்படுத்தப் படாமைக்கான காரணம் கண்டுபிடிக்கப் படல் வேண்டும். செயற்திட்டம் பூரணப்படுத்தப் பட்டு பலன்கள் பெறப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கருவலகஸ்வேவ பிரதேச செயலகத்தின் மோட்டார் வாகனமொன்று என்ஜின் இலக்கம் மற்றும் செஸி இலக்கம் பதிவு ஆவணங்களுடன் இணங்காமையினால், புகைப் பரிசோதனை மற்றும் அறிக்கை வருமான அனுமதிப் பத்திரம் பெறப்படாது வீதியில் ஓடுகின்றமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பல கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் கவனம் கோரப்பட்டிருந்த துடன், அது தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் இந்த விவகாரம் மோட்டார் வாகனச் சட்டத்திற்கு இணங்காத நிலைமையொன்றும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுவதுடன் அதை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | காரணம் கண்டு பிடிக்கப்படல் வேண்டும். மோட்டார் வாகனத் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி குறைபாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வடக்கு சிரிகம்பல மற்றும் தெற்கு கொலின்ஜாடிய காணிகளில் அமைந்துள்ள நிலசெவன அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காணிகள் வென்னப்புவ பிரதேசச் செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | வ/சிரிகம்பல மற்றும் தெ/கொலினஜாடிய அரச காணிகளில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நிலசெவனக் கட்டிடங்களாகும். இக்காணிகள் அரசிற்குச் சொந்தமானவை என்பதுடன், பிரதேச செயலகத்திற்கு உரிமை கையளிக்கப்பட்ட இடமல்ல என்பது தெரிவிக்கப்படுகின்றது. எனினும் பிரதேசச் செயலகப் பிரிவில் உள்ள அனைத்து அரச காணிகள், காணிப் | கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பிரிவின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்ற அரசின் காணிகள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**3.6 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிர்மாணத் தொழில்களின் பராமரிப்புக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அத்தொழில் பரிசோதிக்கப் பட்டு குறைபாடுகள் காணப்பட்டால் விரைவில் முடிக்கப்பட்டு பராமரிப்புக் காலம் முடிவுற்றதன் பின்னர் தேக்கி வைக்கப்பட்ட பணத்தை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ள போதிலும், கற்பிட்டி, நவகன்னேகம, புத்தளம், ஆராய்ச்சிக்கட்டுவ மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேசச் செயலகங்களுக்கு உரிய முடிக்கப்பட்டிருந்த 485 நிர்மாணத் தொழில்களுக்கு உரிய ரூபா 12,782,957 ஆன தேக்கி வைக்கப்பட்ட பணத்தை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உட்பட்டிருந்த செயற்திட்டங்கள் தவிர்ந்த மிகுதி நிர்மாணங்கள் பரிசோதிக்கப்பட்டு தேக்கி வைக்கப்பட்ட பணம் விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேக்கி வைக்கப்படும் காலம் முடிவடைந்ததன் பின்னர் பௌதீகப் பரிசோதனை செய்யப்பட்டு குறைபாடுகள் காணப்பட்டால் செயற்திறனாக அக்குறைபாடுகள் பூரணப்படுத்தப் பட்டு தேக்கி வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) ‘‘சுப்பிரிகமக்’’ சமூக அடிப்படை கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் ரூபா 990,184 ஆன தொகையொன்று செலவிடப்பட்டு கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் இலந்தடிய மீன்பிடித் துறைமுகத்திற்குச் செல்லும் கச கலேவெல்ல | கணக்காய்வில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடு ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்றப்பட்டு தேக்கி வைக்கப்பட்ட பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பௌதீக அளவு பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட வேண்டியதுடன், மதிப்பீட்டின் படி நிர்மாணிக்கப் படுவதற்கு முறையான மேற்பார்வை |

| | | | |
|---|---|---|---|
| | வீதியைத் தார் இட்டு அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் பாதையின் நீளம் 155 மீற்றர் மற்றும் அகலம் 2.74 மீற்றர் ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மதிப்பீட்டின் அளவை விட பாதையின் அகலம் இடத்துக்கிடம் 2.5, 2.6 மீற்றருக்கு இடைப்பட்டதான மதிப்பாகக் காணப்பட்டது. பாதைக்கான எவ்வித நியமங்களின் பிரகாரம் தார் போடப்படாமையினால் பாதையின் கல் பதித்தல் மற்றும் வீதியின் இருபுறமும் உள்ள மண் அள்ளப்பட வேண்டியுள்ளதால் வீதியின் இருபுறமும் வழுக்கி விழக்கூடிய அபாய நிலை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | யொன்று இருத்தல் வேண்டும். நிர்மாண குறைபாடுகள் இனங்காணப்பட்டு ஒப்பந்தக் காரரினால் நிறைவேற்றப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைச் செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் தங்கொட்டுவ பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த துண்டுப் பிரசுரங்களின் இருப்பொன்று அச்செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையால் அழிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை அவலகத்தை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட A/C Plant தற்போது விளைவற்றதாக இருந்ததுடன் இது இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2016 ஆம் ஆண்டில் தங்கொட்டுவப் பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள கட்டிடம் உடைக்கப்பட்டு புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டதால் பழைய கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த இலத்திரனியல் ஆவணங்களும் அலுவலகச் சுற்றாடலின் உத்தியோகபூர்வ விடுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. வருடம் முழுவதும் இவ்வாறு காணப்பட்டதுடன் அதில் எலிகள் மற்றும் காகங்கள் போன்ற விலங்குகள் அவற்றை உண்பதால் இந்த ஆவணங்கள் அழிக்கப்படும் நிலைமை ஏற்பட்டதால் அவற்றை விரைவில் பாதுகாக்கப்படுவதற்காக களஞ்சியப்படுத்துவதற்கு உகந்த இடத்தில் பாதுகாப்பாக | கவனத்தில் கொள்ளாமை மற்றும் தாமதமொன்று ஏற்படல் என்பவற்றை கண்டுபிடித்து செயற்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைச் செயற்திட்டத்திற்காக நிறுவப்பட்டிருந்த திணைக்களக் கிளை அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த வாயுச் சீராக்கி இயந்திரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரையில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அது தொடர்பாகப் பலமுறைகள் எழுத்துமூலம் ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாயு சீராக்கி இயந்திரம் இற்றைவரையில் பொருட் பதிவேட்டில் சேர்க்கப்படாததுடன் 2020 ஆம் பொருட் கணிப்பீட்டின் அறிவுறுத்தலின் பிரகாரம் இற்றைவரை வாயு சீராக்கி இயந்திரம் பொருட் பதிவேட்டில் சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தளம் மற்றும் கற்பிட்டிய பிரதேச செயலகங்களினால் நூறு விடயப் பரப்புக்களுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் நோக்கங்கள் தொடர்பான இலக்குகள், அடிப்படைத் தரவுகள் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் மற்றும் நிறைபேறான அபிவிருத்தி நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கான நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட பொறுப்பான தரப்பினர் போன்றவை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு கொள்தல் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரதேச செயலகம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக் கான வழிகாட்டல் களின் பிரகாரம் திட்டங்களைத் தயாரித்து செயற் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்குச் சேவைகளை வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹகும்புக்கடவல பிரதேச செயலகத்தில் இற்றைவரையில் செலுத்தப்படாத கொடுப்பனவுகள் பெறப்படாத சிறுநீரக கொடுப்பனவுகள், முதியோர் கொடுப்பனவுகள் மற்றும் ஊனமுற்றோரின் கொடுப்பனவு களுக்காக பதிவு செய்த 394 பேருக்கான அட்டவணையொன்று பராமரிக்கப்படுகின்ற போதிலும், அக் கொடுப்பனவிற்காக அங்கீகாரம் பெறப்பட்டு நிவாரணப் பணத்தைச் செலுத்துவதற்கான நடவடிக்கை பூரணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுவோரில் நிவாரணக் கோரிக்கையாளர்கள் தொடர்பான தகவ்கள் மற்றும் தேவையான ஒதுக்கங்களின் அளவு அந்தந்த அமைச்சுக்களுக்கு மாதாந்த அறிக்கையின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. வழங்கப்படுகின்ற ஒதுக்கங்களின் எல்லைக்குள் வழங்கப்பட முடியுமான உச்சபட்ச பயனாளிகளின் எண்ணிக்கைக்கு நிவாரணம் வழங்கப்பட்டது என்பதை தயவும் தெரிவித்துக் கொள்கின்றேன். | கொடுப்பனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புத்தளம் மாவட்டச் செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 13 பதவிகளுக்கு உரிய ஊழியர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 25 ஆகும்.<br>(ஆ) புத்தளம் மாவட்டச் செயலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 18 பதவிகளுக்கான ஊழியர்களின் வெற்றிடங்கள் 390 ஆகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய பிரிவுகளுக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. | தேவைப்பாடு பகுப்பாய்வு செய்யப்பட்டு தேவைப்பட்டால் மாத்திரம் ஆட்சேர்க்கப்பட வேண்டியதுடன் பிரதேச செயலகத்தில் காணப்படும் வெற்றிடங்கள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படல் வேண்டும். |